உயர்வுகளுக்கெல்லாம் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே எல்லோராலும் பாராட்டத்தக்க, நன்றி கூறத்தக்க ஒரு அறிவிப்புக்கு, நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் எழுந்து நன்றி கூறுகிறார். அவர் கூறுவதன் பொருத்தம் என்னவென்றால், இந்தக் காலனி கட்டுவதிலே மாத்திரம் அவர் நன்றிகூற உரிமை உடையவர். ஆனால், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்காக, பொதுவாக செய்யப்பட்டுள்ள பல்வேறு அறிவிப்புகளுக்கு, நன்றிகூறக் கடமைப்பட்டவர், உரியவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தான். அவர் ஏன் வாய்மூடி இருக்கின்றார்? (சிரிப்பு)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி வளர்ச்சி நிதியை ஒரு கோடியே எழுபது இலட்சம் ரூபாய் அளவுக்கு உயர்த்தித் தந்ததற்கும் எங்களது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றோம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி பாலபாரதி, என்ன?

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியத்தை உயர்த்திக் கொடுத்ததற்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு தேவையில்லை என்ற கருத்தைப் பதிவு செய்கின்றேன். (குறுக்கீடுகள்) நான் எனது கருத்தைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–35

11. பேரவை முன்னவர் உரையின் ஒரு பகுதியை நீக்கக் கோருதல்

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அரசியல் அனுபவம்

மிக்கவர்கள். இன்னொரு மாநில அரசைப்பற்றி, கேரளாவில் யார், யாரை ஒழிப்பது என்பதற்கான திட்டம்தான் இருக்கிறது என்ற வார்த்தைகளை மறு பரிசீலனை செய்து சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர்மீதே நடவடிக்கை எடுத்தது. அவரும் பெருந்தன்மையோடு அந்த நடவடிக்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆகவே, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரை, ஒருவரை ஒருவர் வீழ்த்துவது என்ற கருத்து எங்களிடம் இல்லை. ஆகவே, ஒரு மாநில அரசை நம்முடைய தமிழக அரசின் ஒரு மூத்த அமைச்சர் அவ்வாறு சொல்வது என்பது வருத்தத்தையும் வேதனையையும் தருகிறது. அதைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிந்துரைக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட வார்த்தைகள் நிலைமையைக் குறிப்பிடுவதற்குக் குறிப்பிட்டேனே தவிர, ஆட்களைக் குறிப்பிடுவதற்காக அல்ல. இன்னும் சொல்லப் போனால், வேறு மாநிலங்களிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன என்பதற்காகச் சொன்னேனே தவிர, ஒரு குறிப்பிட்ட மாநிலத்தையோ, ஒரு கட்சியையோ குறைவுபடுத்துவதற்காகச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2009), மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.